செ.வெ.எண்: 17 நாள்: 10.03.2021

பெரம்பலூர் மாவட்டம்

**சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ஐ முன்னிட்டு 100 சதவீத வாக்குப்பதிவின் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மகளிர் சுய உதவிக் குழுவினர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.**

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ஐ முன்னிட்டு பொதுமக்களிடம் 100 சதவீத வாக்குப்பதிவு ஏற்படுத்திடும் வகையில் மகளிர் சுய உதவிக்குழுவினைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மகளிர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப. அவர்கள் பாலக்கரையில் இன்று (10.03.2021) கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, பொதுமக்களிடையே 100 சதவீத வாக்குப்பதிவினை வலியுறுத்துவதற்காகவும், கடந்த தேர்தலின்போது வாக்குப்பதிவு சதவீதம் குறைந்த பகுதிகளில் தற்போது கூடுதலான வாக்குப்பதிவினை ஏற்படுத்துவதற்காகவும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொள்ளும் வினாடி, வினா போட்டிகள், கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, விழிப்புணர்வு ஸ்லோகங்கள் எழுதும் போட்டிகள், மகளிர்களுக்கிடையே ரங்கோலிப் போட்டிகள் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், அதிகப்படியான வாக்குகளை செலுத்தி பெரும்பான்மையான வாக்காளர்கள் தமக்கான தலைவர்களை தேர்ந்தெடுப்பதன் நன்மை குறித்து விளக்கியும், கடந்த தேர்தலின்போது வாக்குப்பதிவு குறைந்த பகுதிகளில் உள்ள வாக்காளர்களை சந்தித்து தற்போதைய தேர்தலில் வாக்களித்திட வேண்டும் என்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் தேர்தல் தூதுவராக மாற்றுத்திறனாளி விளையாட்டு வீராங்கனை செல்வி அம்பிகாபதி அவர்கள் நியமிக்கப்பட்டு, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பாலக்கரையிலிருந்து, வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் வரை பல்வேறு சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மகளிர்கள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் **வாக்களிப்பது ஒவ்வொருவரின் கடமை, கண்ணியத்துடன் வாக்களிப்போம், முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியுடன் வாக்களிப்போம், வாக்குரிமை நமது அடிப்படை உரிமை, வாக்களிப்பது ஜனநாயக கடமை, வாக்களித்திடுவீர் ஜனநாயகத்தை காத்திடுவீர், வாக்கின் வலிமை தேசத்தின் வலிமை, வாக்களிப்போம் வாழ்வுரிமை காப்போம், எனது வாக்கு! எனது உரிமை! 100 சதவீதம் வாக்களிக்க தயாராகுங்கள் ஆகிய வாசகங்கள்** அடங்கிய விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திக்கொண்டு சென்றனர்.

முன்னதாக பெரம்பலூர் உழவர் சந்தையில் காய்கறி வாங்கும் வாக்காளர்களிடம், வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், 100 சதவீதம் வாக்களித்து நமக்கான தலைவரை தேர்ந்தெடுக்கும் முறைகள் குறித்த விழிப்புணர்வு அடங்கிய துண்டு பிரசுரங்களை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.செ.ராஜேந்திரன் அவர்கள் பொதுமக்களிடம் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் /சார் ஆட்சியர் திருமதி ஜெ.இ.பத்மஜா இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஏ.கே.நாகராஜ பூபதி, வட்டாட்சியர்(பெரம்பலூர்) திரு.சின்னதுரை உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**